உ

கடவுள் துணை.

மதுரை மீனாட்சியம்மன்

உயிர்வருக்கமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914

உ

கடவுள் துணை.

உயிர்வருக்கமாலை.

அஞ்செழுத்தானநீ ஓரெழுத் துருவமாய் அரனோ டிருந்தவளும்நீ, ஆறுசாஸ்திரம் நாலு வேதக் கலைக்கியானம் அன்பத்தோரட்சரமுநீ, கஞ்சமலர்மாதுநீ வெஞ்சமரில்வாணனைக் கண்டதுண்டஞ்செய்தவளுநீ, காரணிக் கலையேறு வீரமாங்காளிநீ கைலாச வடபாலிநீ, பஞ்சகோணத்திருந் தரம்வளர்ப்பவளுநீ பாவங்கள் தீர்ப்பவளுநீ, பாவாணர்பிணிதீர உதவிசெய் மகம்மாயி பகவதீ கௌமாரிநீ, வஞ்சகத்திருடர்களை துஞ்சிட வறுத்ததிருமாலின்சகோதரியும்நீ, வருமடியர்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (க)

ஆதியாய் அந்தமாய் சோதியாய்வெளியுமாய் ஆறாறுதத்துவமுமாய், அகிலமாய் அண்டமாய் சப்தசாகரமுமாய் அணுவாகிமகமேருவாய், நீதியாய்நெறியுமாய் நிலையுமாய் கவலையுமாய் நினைவுமாய் கனவுமாகி, நேசமாய் பாசமாய் உணவற்ற வடிமைக்கு நெஞ்சுக்குளொருதெ

ய்வமாய், பேதியாதேயிருந் தடிமைபிணிதீரெனைப் பெற்றவளுநீயாகுமே, பிஞ்சுமதிமஞ்சணி சடைச்சியே சிவனோடு பேசிநடமாடுகின்ற, வாதியேமுக்கண்ணியபிராமி சிவகாமி வல்லிதிரிசூலிநீலி, வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (௨)

இரவலர்க் கீயாத வரிவிலாமூடரை யிதங்காத கல்நெஞ்சரை, யெவ்வுயிருந் தன்னைப்போல் நினையாத கசடரை ஈனங்கள்செய்பவர்களை, பரகதியைநினையாததுற்சனர்கள் முன்சென்று பாடாம லுன்புகழையே, பத்தியாய்நித்தமும்துதிக்கவேயருள்தரும் பரமகல்யாணிநீயே கரமுருகசுந்தரி ராவணன்முடிகொய்த கண்ணன் சகோதரியுநீ, கங்காளிமகிடசங்காரிஓங்காரி காரணிபரிபூரணி, வரமருள் புரந்தரி நிரந்தரி வல்லியாய் வடிவாக நின்றவுமையே, வருமடியர்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே (௩)

ஈவதுவிலக்காமல் நோய்பிணிகள் வாராமல வெனை மறலியணுகாமலே, யிருகமலபாதார விந்தமே தந்தெனை யெப்போதும் நீயாளுவாய், தாயீன்ற பிள்ளையின் நூறு பிழைசெய்யினும் தாயலா தார்பொறுப்பார், தஞ்சமென் றஞ்சமென்றலெனக் காரொருவர் தாரணியில் வேறு

முண்டோ, ஓயாதபொருள்தேடிவைக்கிலோர் பிள்ளைநா னுண்டுகலை மூற்றமகளோ, டிரவாடிவாழலாம் தப்பினால் மூவரும்உடனேகெடுக்கநினைவார்,வாயாரவெண்ணெயை உண்டமால் தங்கையே வந்தடிமைகார்மங்கையே, வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சி யுமையே. (௪)

உற்றவர்கள் பெற்றவர்கள் உறவென்ன சுற்றமும் ஒருகோடிபேரிருந்தும், ஒருகோடிதனமல்லபெருங்கோடி பொன்னிருந்தும் துதவுமோமறலிவருநாள், எற்றேசகாலமும் நின்பாததெரிசனை யிடைவிடாதே நினைந்தால், ஏமனோபிணிகளோ கிரகதோஷங்களோ எண்டிசைபரந் தோடுமே, பித்தனொடு அண்டங்கள் கிடுகிடென நடனமொடு பேச்சியாய் நின்றவடிவே, பேதாதிபேதமாய்வல் லுயிர்படைத்திட்ட பிரம்மனுக் கதிகாரியே, வற்றாதசெல்வமுங் கல்வியுஞ்ஞானமும் வந்திடவெனக்கருளுவாய், வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரை [illegible]னாட்சியுமையே. (௫)

ஊனுடம்புக்குளே வாசலொன்பது விட்டு உபாய தந்திரமாகவே, உள்ளேந்துபதமும் ஆறு ஆதாரமும் ஓங்கார ஸ்ரீபீடமும், பானுவும் திங்களும் சுழிவட்டமுனைகளும் பங்கயத்தயனுமாலும், பரமனும் சத்தியும் வெளியொளியுமாகப் படைத்தவளுநீயாகுமே, தேனூருகனி

வாய் திரந்தஞ்செழுத்தைத் தெளிவாக நீயெனக்கு, சித்தம்வைத்தென்பேரில்பேரின்பவாழ்க்கையைதெளிந்திடயெனக்கருளுவாய், வானுலவுதிங்களணி செஞ்சடிலனொடுநட மாடிவரும் ரூபமயிலே, வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (௬)

எட்டுகிரிமீதினில் யேழுலகம் வைத்து மகம்மேருவை நிறுத்தியதுவும், யியலான பூமிக்கு ளாடுசாகரமுமாம்யிலக்கத்த பல்லுயிர்களும், தட்டுவரை வைத்ததும் ஜாதிவிதமானதும் சமயமாறுவிதமும், தாரணியளந்தமால் நான்முகன் அறுமுகன் தந்திமுக னனவிதமும், மட்டுலவு லட்சுமி பார்வதி சரஸ்வதி மாகாளியானவிதமும், வாழ்த்தவே முடியாது நின்மகிமையானதே வளர் சத்திசிவமிரண்டே, வாட்டத்தி லறுகோண மூர்த்தியேயிமயகிரி மடந்தையெனையாளவந்த வருமடியர்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (எ)

ஏற்பது யிகட்சியாம் யில்லறம் நல்லதாம் ஈவதேபெருமை யெனவே, யிரவலற் கன்னசொர்னங் கொடுக்கவே ஈஸ்வரியருள்புரிகுவாய், காற்பதேவிரதமாம் உன்பாததெரிசனை கண்டுதொழ யறியாதவன், கல்நெஞ்சன் மூஷிகன் சிவபூசையறியாத கஷ்ட துஷ்டக் கபடனுன், நாற்பத்துமுக்கோண சத்தியைபூசிக்க நாவினால்துதியா

தவன், நானுனக்கடிமையாய் நீயென்னை யாட்கொண்ட நவினத்தை யென்சொல்குவேன், வார்பாகயென்னை மறலி யணுகாமல் ரக்ஷித்துன் மலரடி பதஞ்சேரவே, வருமடியர்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (அ)

ஐயாறுமூவேழு அக்ஷரத்துள்ளாகி ஆதியாய் சுழிமுனையுமாய், அனவரதகண்டமாய் பிண்டமாய் யெண்ணான்கு அறம்வளர்த்திடு தாயமாய், கையைந்து நாலு வாய்மும்மஜம்செவிகொண்டு கரிமுகவனொருகொம்பனை, காங்கயன் பன்னிருகை வேலனைப்பெற்றிடும் கன்னிபகவதிகுமரிநீ, பையரவணிந்தவன் சடையிலும் கைலூரி பாகத்தமர்ந்தவளுநீ, பதினாலுலோகமும் நிறைந்தபரிபூரணி பாதபங்கயநாலுவாய், வையகந்தன்னிலே வருமடியைதீர்த்துமாவாழ்வளித்திடுவன்னைநீ, வருமடியார்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. ()

ஒன்றாகிரெண்டாகிஒன்றிரண்டொன்றாகிவுண்மை குருஞானவொளியாய், வணர்வாலே அரிவாகிமுத்திக்கு வித்தாகி உன்னுக்குள்நீயுமாகி, நன்றாகநீயெனக் கன்னையாய் குருவுமாய் நானுனக் கடிமையானேன், நரகத்தில் வீழாமல் உன்கருணைமூழ்கியே நமனைவெல்லக் கருணைசெய், கன்றானை தேடிவரும் வேளைகண்டேயதன் கற்று

பிரங்குவதுபோல், கால்தூக்கிநடனமிடும் தியாகரிடபா தத்தில் தங்கினமால்தங்கையே, வருமடியர்குறைதீர வர மருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (ய)

ஓதவறியேனுனைப்பாடவறியேன் ஒருவர் உத்தரம் பேசவறியேன், உரைக்கின்ற முந்நூல்கள் நூற்பயன் அறிகிலேன் ஓம் நமசிவாயமறியேன், நீதமறியேன் சிவ பூசையறியேன் குருவின் பிணையடி வணங்க வறியேன், நெஞ்சினில்தியானிக்க மந்திரமறியேன்பல நேமநிஷ்டை களுமறியேன், வேதமறியேன் ஆறுசாஸ்திரமறியேன் உனைவேண்ட அறியாதவனைநீ, மெய்யாகவேதடுத் தடி மைகொண்டாய் உனது விதிகமலபாதமருள்வாய், மாத மேபத்தும்சுமந்துபெற்றுயென்னை வளர்ப்பது உனக்கரு மையோ, வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரை மீனாட்சியுமையே. (கக)

ஔவியம்பேசுதல் ஆக்கத்திற்கழுகென அறியாத நெஞ்சர்முன்போய், அருமையும் பெருமையும் சொன் னதாலென்கவலை ஆறுவதுஎளிதாகுமோ, யெவ்வுயிரை யும்படைத் தரம்வளர்ப்பவளுக்கு யெளியனொரு விண் ணப்பமே, யேழையினிபாரின்மேல் பிறவாமல்ஒருமந்தி ரம் ஈஸ்வரியருள்புரிகுவாய், நவ்வுமவ்வுஞ்சவ்வுவவ்வுமவ்

வுந்தினம் நாவிலே நிற்க அருள்வாய், நாலைந்து கிரகமும் ஒத்திருக்கும்படி நடத்தியேயெனையாளுவாய், வவ்விலே சுழிவட்ட முனையிலே ஆதார வஸ்துவாய் நின்றபொருள்நீ, வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரை மீனாட்சியுமையே. (௧௨)

அஃஞெடு நடனமிடு பொற்பதத்திடுசதங் கைக்குவிரல்காலாழியும், அன்னநடையொத்ததிரு பாதபாடகமுடன் அணிபெருந் தண்டை கொலுசும், திக்குவொளி வீசுசெங் கைக்கடகமோதிரஞ் செம்பொன் ரவிக்கையழகும், செங்கதிர்களைந்தும் சரப்பளி பதக்கமும் சேறு மங்கலஞாணுடன், பக்கமதிலிருகுழை தொடுத்த மூக்குத்தியும்பவளவாய்முகத்தினழகும், பங்கயமுகத்தினிடை செந்தூரபிறைநுதற் பார்வையுங்கூந்தல்முடிமேல், வைக்குமிறை திருவெண்ணீ றணியெழுந் தருளீசன் மனத்துக்குள் நீயிருப்பாய், வருமடியர் குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. (௧௩)

மீனாட்சியம்மன் - உயிர்வருக்கமாலை

முற்றிற்று.